Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸூ ஆனி மீ 1 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 17 (15 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 171

தமிழரான

## வெங்கட்ராமன் ஜனுதிபதி வேட்பாளர்

### இந்திரா காங்கிரஸின் தெரிவு

புதுடில்லி, ஜூன் 15

தற்போதைய உபஜனுதிபதி திரு. இராமசாமி வெங்கட்ராமனே ஜனுதிபதி பதவிக்கு வேட்பாளராக நியமிப்பது என்று இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு முடிவு செய்தது.

குழுக் கூட்டம் நேற்று பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் நடைபெற்றது.

திரு. வெங்கட்ராமனின் பெயரை, காங்கிரஸின் மூத்த தலைவர் திரு. கமலபதி திரிபதி முன்மொழிந்தார்.

குழு அதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நவிண்டிலில்

### உயரதிகாரி உட்பட பல சிப்பாய்கள் பலி!

வல்வெட்டித்துறை, ஜூன் 15

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நவிண்டிலில் நடைபெற்ற போராளிகள் - சிப்பாய்கள் நேரடிமோதலில் ஒரு உயர் அதிகாரி உட்பட பல சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

நெல்லியடியிலிருந்து உடுப்பிட்டிக்கு நடந்து சென்ற சுமார் முப்பது சிப்பாய்களுடனேயே போராளிகள் நேரடியாக மோதினர்.

போராளிகள் தரப்பில் சேதம் ஏதுமில்லையென்று போராளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-ள-160)

## மண்டைதீவில்

### 7 சடலங்கள் அடக்கம்

### இன்னும் பல கடலில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானதாகக் கூறப்படும் ஏழு பேரின் சடலங்களை மண்டைதீவு மக்கள் அடக்கம் செய்தனர்.

இந்தச் சடலங்களில் சூட்டுக் காயங்களும் வெட்டுக்காயங்களும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது,

ஐந்துபேரின் சடலங்கள் ஒன்ருகப் பிணைக்கப்பட்ட நிலையில் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேலும் பல சடலங்கள் கடலில் மிதந்துகொண்டிருப்பதைக் கண்டதாகவும் பலர் தெரிவித்தனர்.

15 தொடக்கம் 30 வயது மதிக்கத்தக்க இளைஞர்களது சடலங்களே கரை ஒதுங்கின என்றும் கூறப்படுகிறது.

(உ-10)

## யாழ் ஆஸ்பத்திரியில் குடிதண்ணீர் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 15

கடந்த இரண்டுவாரங்களுக்கு மேலாக யாழ் ஆஸ்பத்திரிக்கான குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

யாழ் மாநகர சபையால் யாழ் ஆஸ்பத்திரிக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டுவாரங்களுக்கு மேலாக குடிதண்ணீர் இல்லாததன் காரணமாக நோயாளர்களும் ஊழியர்களும் பெரும் அல்லற்படுகின்றனர்.

(உ-10)

## முள்ளிப் பகுதியில் மீண்டும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

சனிக்கிழமை பிற்பகல் முள்ளிப்பகுதி பிரதான வீதியில் இருந்து தள்ளிச் சென்றிருந்த சிப்பாய்கள், நேற்று மீண்டும் வீதிப்பகுதியில் காணப்பட்டனர்.

நேற்று மாலைவரை அங்கிருந்த சிப்பாய்கள் அப்பகுதியில் உள்ள தமது மினி முகாமைப் பலப்படுத்தும் வேலைகளைச் செய்தனர்.

முள்ளியிலுள்ள அரச குடியேற்றத் திட்டவீடுகளில் தற்போது தங்கியுள்ள சிப்பாய்கள் அங்கு பதுங்கு குழி வெட்டும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

15-06-1987
திங்கட்கிழமை

சுபநேரம்:-
11.53 முதல் 1.23 வரை

ராகுகாலம்:-
7. 23 முதல் 8. 53 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# பொலனறுவை

## மினி ராணுவ முகாமை புலிகள் தகர்த்தனர்

### ஆயுதங்கள் பலவற்றை கைப்பற்றியதாகவும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

கடந்த சனிக்கிழமையன்று பொலன்னறுவையில் உள்ள மினி இராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நிகழ்த்தி அதனைத் தகர்த்தனர்.

இந்தத் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலின் போது சிப்பாய் ஒருவரின் சடலமும், ஆயுதங்களும் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ ஏ. கே. ரைபிள்-1.
★ 7. 62 துப்பாக்கி ரவைகள்-60.
★ ரவைக் கூடுகள் - 4.
★ ஜே. ஆர் ரக கைக்குண்டுகள் - 5.
★ தொலைத்தொடர்பு சாதனம் - 01.

இவை தவிர ஹெல்மெட்டுகள், சீருடைகள் போன்றவையும் தங்களால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

(உ)

## ஸ்ரீலங்கா இப்போது நண்பர்களற்ற நாடு

### ஜே. ஆரைக் கண்டிக்கிருர் சிறிமா

கொழும்பு, ஜூன் 15

நண்பர்கள் இல்லாத நாடாக ஸ்ரீலங்காவை ஜெயவர்த்தன அரசாங்கம் மாற்றி விட்டது.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கண்டித்திருக்கிருர்.

யூகோஸ்லேவியாவில் ஒரு மாதம் தங்கி வைத்திய சிகிச்சை பெற்ற திருமதி பண்டாரநாயக்கா கடந்த சனிக்கிழமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வீமன்காமத்தில் மினிமுகாம் அமைக்கப் படையினர் முயற்சி

காங்கேசன்துறை, ஜூன் 15

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் தொடர்ந்து நிலைகொண்டுள்ள இராணுவம் வீமன்காமத்தில் ஒரு மினி முகாமை அமைக்கும்முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அறியவந்துள்ளது.

வீமன்காமம் வெங்காயச்சங்க கட்டடத்தின் சுற்றுடல் பகுதியிலுள்ள வீடுகளையும், அருகில் உள்ள பனை வெளியையும் இந்த மினி முகாம் அமைக்க இராணுவம் பயன்படுத்தலாமெனவும்-

இதற்காக அப்பகுதியில் பனைமரங்களை தறிக்கும் வேலையும், முட்கம்பி வேலி போடும் வேலையும் மேற்கொள்ளப் படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் பகுதியில் சில சமயங்களில் ''ஹெலி'' வந்து தரையிறங்கிச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்கள் மேற்படி பகுதியில் அதிகளவு இராணுவமும் புல்டோசர் போன்ற பாரிய வாகனங்களும் காணப்படுவதாகத்தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதியில் வீடுகளை பார்வையிடச் செல்வோர் இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி வருகிருர்கள்.

நேற்று தமது வீட்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# ராஜீவை நேரில் சந்திக்க யாழ்ப்பாணத்திலிருந்து குழு

### மக்கள் அவலத்தை எடுத்துரைக்கும்

யாழ்ப்பாணம் ஜூன் 15

யாழ்ப்பாண மக்களின் அவல நிலையை, உண்மை நிலையை இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் நேரில் எடுத்துச் சொல்வதற்காக, இங்கிருந்து விசேட குழு ஒன்று இந்தியா செல்லவிருக்கிறது.

பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடந்த போது விசேட குழுவை இந்தியாவுக்கு அனுப்புவது குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தியப் பிரதமரை நேரில் சந்திக்கும் உத்தேச விசேட குழு, இங்கு நடக்கும் இராணுவக் கெடுபிடிகளையும், மக்கள் படும் பல வித கஷ்டங்களையும் விவரமாகவும், அத்தாட்சி பூர்வமாகவும் பிரதமரிடம் தெரிவிக்கும். மக்கள் வாழ்க்கை சகல வகைகளாலும் சீர்குலைந்து போயுள்ளதையும் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு எடுத்துரைப்பார்.

அதே வேளை, இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் யாழ்ப்பாண மக்களின் உதவியற்ற நிலையைத் தெளிவு படுத்துவர்.

நேற்று நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற ஒன்றிணைப்புக் குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ இராணுவம் நிலைகொண்டுள்ள பிரதேசங்களிலிருந்து அது வாபஸ் பெறப்பட வேண்டும்.

★ கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ பாடசாலைகளில் தங்கியுள்ள சிப்பாய்களை வாபஸ் பெற்று மாணவர்கள் தமது கல்வியை

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ கோவில் பாத்திரங்களில் இறைச்சிக்கறி சமையல்
★ சப்பாத்துடன் மூலஸ்தானம் வரை நடமாட்டம்
★ கோவில் வாசலில் கிடாய் வெட்டு

## மாவைக் கந்தன் ஆலயத்தை அசூசைப் படுத்தும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

★ மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் உள்ள தேர் முட்டியில் சிப்பாய்கள் ஆடு, மாடுகளை கட்டிவைத்துள்ளனர்.

★ கோவில் அன்னதானப் பாத்திரங்களில் ஆடு, மாடுகளைச் சமைக்கின்றனர்.

★ சப்பாத்துக்காலுடன் மூலஸ்தானம் வரை நடமாடுகின்றனர்.

★ கோவில் வாசலில் சிப்பாய்கள் கிடாய் வெட்டுகின்றனர்.

★ கோவிலினுள் இருந்த வெள்ளித்தாம்பாளங்கள் தங்க ஆபரணங்கள், தங்க வேலாயுதம், தேர், மஞ்சம் என்பவற்றிற்கு என்ன நடந்ததென்றே தெரியவில்லை.

—இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ து. சண்முகதாசக்குருக்கள் கூறினர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலும் பட்டினி

கொழும்பு, ஜூன் 15

மூதூர், ஈச்சிலம்பத்தை பிரதேசத்தில் சுமார் 8 ஆயிரம் தமிழர்கள் பட்டினியால் அவதிப்படுகின்றனர் என்று ஜனுதிபதி ஜெயவர்த்தனவுக்கு தந்தி மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது.

கிழக்கு இலங்கை புனர் வாழ்வுக் கழகம் இந்தத் தந்தியை அனுப்பியுள்ளது.

இக்கழகத்தின் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தகவல் தருகையில்,

இம் மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்கி இருக்கின்றனர். போதிய வைத்திய வசதிகள் இல்லாத காரணத்தினல் பலர் உயிரிழந்திருக்கின்றனர்'-என்று தெரிவித்தார்.

(உ-எ)

## தொண்டா சென்னையில்

கொழும்பு, ஜூன் 15

அமைச்சர் எஸ். தொண்டமான் சனிக்கிழமை காலை சென்னை பயணமானுர்,

சென்னையில் தமிழர் அமைப்புகளுடன் முக்கிய பேச்சுக்களை திரு. தொண்டமான் நடத்துவார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

### முச்சந்தி முரளி



அங்காலை இடிஞ்சு மண்டிப்போன பௌத்த விகாரைகளை எல்லாம் கோடிக்கணக்காய் செலவழிச்சுத் திருத்துகினமாம், இஞ்சை எங்கடை கோயிலுகள் அவைக்கு கசாப்புக் கடையாய்ப் போச்சு. உதுதான் நவீன தார்மீகம்......!

## ஜே. வி. பி. கட்டுப்பாட்டில்

கொழும்பு, ஜூன் 15

தெற்கு இலங்கையில் ஜே. வி. பியினரின் நடவடிக்கைகளை பாதுகாப்புப்படையினர் தமதுமுழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'லங்கா புவத்' இப்படி அறிவித்திருக்கிறது.

(உ)

## பேச்சு குறித்து அமிர்

சென்னை, ஜூன் 14

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதி திரும்பும்வரை பேச்சுக்கள் குறித்து சிந்திப்பதற்கே இடமில்லை.

—இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் தெரிவித்திருக்கிருர்.

(உ-எ)

## தமிழரை அழிப்பதே ஜே. ஆரின் நோக்கம்

### திராவிடர் கழகம் கூறுகிறது

தஞ்சை, ஜூன் 14

பேச்சுக்கள் என்று கூறிக் கொண்டாலும் இலங்கைத் தமிழரை நிர்மூலமாக்குவதே ஜெயவர்த்தனவினதும் அவரது அரசினதும் உண்மையான நோக்கம்.

- இப்படி திராவிடர் கழகம் கருத்து வெளியிட்டிருக்கிறது.

கழகத்தின் செயற்குழுக் கூட்டம் வல்லம் என்னும் இடத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழரைக் கொல்லாமல் தடுக்க இந்தியா, ஸ்ரீலங்கா அரசு மீது நிர்ப்பந்தம் செலுத்த வேண்டும் என்று சோரும் தீர்மானம் ஒன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

(உ-எ)

## தமிழ் ஈழத்தை அங்கீகரிக்கக் கோரி உண்ணுவிரதம்

கொக்குவில், ஜூன் 15

தமிழ் ஈழத்தை அங்கீகரிக்குமாறு இந்தியாவைக்கோரி யாழ் வண்ணார்பண்ணை வடமேற்கு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் நேற்று உண்ணுவிரதம் ஒன்று நடத்தப்பட்டது,

இந்த உண்ணுவிரதத்தை ஸ்ரீ காமாட்சி சன சமூக நிலையம் ஒழுங்கு செய்திருந்தது.

அண்மையில் வடமராட்சிப் பகுதியில் படையினர் நிகழ்த்திய அட்டூழியங்களைக் கண்டித்தும்-

இனவெறி இராணுவத்தை தமிழ் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றக் கோரியும் இந்த உண்ணுவிரதம் நடத்தப்பட்டது.

(உ)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

**இடவசதி**

வியாபார ஸ்தாபனங்கள் இணைந்து செயற்படவும் பலவிதபொருட்களை ஒரே இடத்தில் விற்பனை செய்யவும் கட்டிட இடவசதி கோப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ளது. விபரங்களுக்கு: மு. சிவலோகநாதன், 443, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் அல்லது சோ. வேலசேல்வரன். சட்டத்தரணி, கொழும்புத்துறை அல்லது கிளுவானை ஒழுங்கை, கோப்பாய். (1417)

**மணமகள்கள் தேவை**

யாழ்/இந்து உயர் வேளாள குடும்பத்தைச் சேர்ந்த தராதரம் படித்த உத்தியோகம், தொழில் நிறுவனம், பிரபல சொந்த வியாபாரம், நிரந்தர வெளிநாட்டு உத்தியோகம் (ஜேர்மனி) உள்ள மணமகன்கள் 37-25 இடைப்பட்ட வயதுகளில் உண்டு. தொடர்பு கொள்க:- S. பரதாசன் 218/2, பலாலி வீதி, கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில், கந்தர்மடம். (1420)


# நகைகளை விற்பதில் மக்கள் பெரும் சிரத்தை

## உணவுத் தட்டுப்பாட்டுடன் பணக் கஷ்டம் மக்களை வாட்டுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 15

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக பெரும் எண்ணிக்கையானோர் தமது நகைகள் சேமிப்புக்களை விற்று பணமாக்கத் தொடங்கியுள்ளனர்.

உணவுப் பொருள் தட்டுப்பாடு ஒரு புறமிருக்க இதுவும் ஒரு புதிய பிரச்சினையாக தற்போது உருவெடுத்திருக்கிறது,

குடாநாட்டு நிலைமையினால் பலர் வேலை வாய்ப்புகளை இழந்துள்ளனர். வர்த்தக மற்றும் தொழில் முயற்சிகள் முற்றாகத் தடைப்பட்டிருக்கின்றன.

இதனால் மக்கள் தமது சேமிப்புகளைக் கரைத்து வாழ்க்கை நடத்தவேண்டிய துரதிஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் தினமும் பெரும் எண்ணிக்கையானோர் நகைக்கடைகளுக்கு வந்து தமது சேமிப்புகளான நகைகளை விற்றுக் காசாக்க முயற்சி எடுத்து வருகிறார்கள்.

ஆனால் நகைக்கடைப் பகுதிகளிலும் நகை விற்போர் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் நகைகளை வாங்குவதில் சிரத்தை காட்டுவோர் எண்ணிக்கை குறைந்திருக்கிறது.

நகைக்காரர்களிடம் பணப்புழக்கம் குறைந்திருப்பதால் நகைகளை விற்பதிலும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

உணவுப் பொருள் தட்டுப்பாடு போல் பணப்புழக்கம் குறைந்திருப்பதும் குடாநாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (உ)

## சர்வமதக் குழுவை அனுப்பி உண்மையை அறிந்து கொள்ளுங்கள்

### ஜனாதிபதிக்கு மகஜர்

காங்கேசன்துறை, ஜூன் 15

"வடக்கில் படைகள் மேற்கொள்ளும் அல்டூழியங்கள் பற்றி சரியான நிலையை தெளிவுபடுத்தவேண்டியது அவசியம். இதற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள சர்வமத தலைவர்களை உள்ளடக்கிய குழு ஒன்றைஅனுப்பி உண்மைநிலையை அறிந்து பகிரங்க அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

இவ்வாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில்கோரிக்கை விடுத்துள்ளார்.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீங்கள் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை பயங்கரவாதிகளுக்கு எதிரானதேயன்றி பொதுமக்களுக்கு எதிரானதல்ல வென்றும் கூறியுள்ளீர்கள்.

அது மட்டுமின்றி இலங்கை புத்தபெருமானின் போதனைகளைப் பின்பற்றி வரும் ஒரு அரசு என்றும் புத்தபெருமானுடைய வழியிலேயே தார்மீக ஆட்சியை மேற்கொண்டு வருவதாகவும் கூறியுள்ளீர்கள்.

எனவே வடக்கில் நடக்கும் சம்பவங்கள் பற்றிய உண்மை நிலைப்பாடு தங்களுக்கும் தங்கள் அமைச்சர்களுக்கும் தெரியாதுள்ளன என்றே கருதவேண்டிய நிலை தோன்றுகிறது.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-68)

அகதியாக

## இடம் பெயர்ந்த பெண்ணுக்கு கிடைத்த குழந்தை அதிர்ஷ்டம்

வட்டுக்கோட்டை, ஜூன் 15

இடம்பெயர்ந்த அகதிப்பெண் ஒருவருக்கு பச்சிளம் குழந்தை ஒன்று அதிர்ஷ்டமாகக் கிடைத்திருக்கிறது.

பற்றை வளவு ஒன்றினுள் அநாதரவாக விடப்பட்ட அழகிய பச்சிளம் பெண்குழந்தை ஒன்றே ஒன்றே இந்தப் பெண்ணுக்குக் கிடைத்திருக்கிறது.

வட்டு மேற்கு கிருஷ்ணா வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள குடியிருப்பற்ற பற்றை வளவு ஒன்றில் நேற்றுக் காலை 6 மணியளவில் அழுதுகொண்டிருந்த இந்தக் குழந்தை கண்டெடுக்கப்பட்டது.

விதியால் கடைக்குச் சென்றுகொண்டிருந்த சிறுவர்கள் இருவர் குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டு அருகில் உள்ள வீட்டுக்காரர்களுக்கு தெரிவித்தனராம்.

வீட்டுக்காரர்கள் அங்கு சென்று பார்த்த போது அன்று அதிகாலையில் பிறந்ததாக கருதப்படும் குழந்தை ஒன்றுமுள்ளுப்பற்றைக்குள் அழுதுகொண்டிருப்பதையும் குழநதைக்யைச் சுற்றி எறும்புகள் மொய்த்துக்கொண்டிருப்பதையும் கண்டனர்.

இது குறித்து போராளி அமைப்பு ஒன்றுக்கும் அறிவிக்கப்பட்டது.

மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தொல்புரம் முன்கோடை கிராமத்தில் தஞ்சமடைந்துள்ள திருமதி லீலாவதி பரமலிங்கம் என்னும் இளம் பெண் இக் குழந்தையை பொறுப்பேற்றுள்ளார். இவர் திருமணமாகியும் குழந்தைச் செல்வம் கிடைக்காமல் கவலையுற்றிருந்தார். (இ-161

## பெற்றோர் தலையீடு; தம்பதியர் தற்கொலை

வட்டுக்கோட்டை, ஜூன் 15

காதலித்துத் திருமணம் செய்துகொண்ட ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளம் தம்பதியர் இருவர் பெற்றோரின் தலையீடு காரணமாக இரண்டு வருடங்களுக்குப் பின் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்கள்.

பெற்றோரின் தலையீட்டினால் மனமுடைந்த இவர்கள் தாங்கள் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொள்வதாகவும்—

தங்கள் இருவரையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே இடத்தில் ஈமைக்கிரியைகளை நடத்தவேண்டும் என்றும் கடிதம் ஒன்றை எழுதிவைத்து விட்டே நஞ்சருந்தியுள்ளனர்.

இவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் நஞ்சருந்தியபோதும் கணவர் கடந்த செவ்வாய்க்கிழமை அன்றே வீட்டில் மரணமானார்.

ஆனால் மயங்கிய நிலையில் இருந்த மனைவி யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் புதன்கிழமை மரணமானார்.

தம்பதியர் இருவரும் கடிதமூலம் வேண்டிக்கொண்ட விருப்பம் நிறைவேற்றப்படாமலேயே ஈமைக்கிரியைகள் நடைபெற்றன.(உ-161)

### பயிற்சி வகுப்பு

அனலைதீவு, ஜூன் 15

ஊர்காவற்றுறைச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜி. கந்தசாமி அவர்களின் பணிப்பின் பேரில் நயினாதீவு சுகாதாரப் பரிசோதகர் திரு. ஏ. செல்லையா 35 தொண்டர்களுக்கான ஆரம்ப சுகாதாரப் பயிற்சி வகுப்புகளை கடந்த வியாழன் முதல் ஆரம்பித்துள்ளார்.

டாக்டர் எஸ். சர்வானந்தாவும் இணைந்து வகுப்புகளைநடத்துவார். (உ-18)

பண்டத்தரிப்பு, சங்கானையில்

## நோயாளர் வரவு தினமும் அதிகரிப்பு

பண்டத்தரிப்பு, ஜூன் 15

பண்டத்தரிப்பு, சங்கானை அரசினர் வைத்தியசாலைகளில் நோயாளர் எண்ணிக்கை தினமும் அதிகரிக்கின்றது.

எனினும் வைத்திய அதிகாரிகள் பெரும் கஷ்டங்கள் மத்தியிலும் நேரம், சிரமம் பாராது மிகுந்த பரிவுடன் சேவையாற்றுகின்றனர்.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை பகுதிகளில் இருந்து அகதிகளாக வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஆங்காங்கே தங்கியுள்ளவர்களே மேற்படி இரு அரசினர் வைத்தியசாலைகளுக்கும் பெரும் எண்ணிக்கையில் செல்கின்றனர். (உ-ள-120)

## சட்ட விரோத மின்பாவனையைத் தடுக்க நடவடிக்கை

பண்டத்தரிப்பு, ஜூன் 15

பண்டத்தரிப்பு பட்டினசபைப் பகுதியில் சட்டவிரோத மின் பாவனையை குறைத்து சட்டபூர்வ மின்பாவனையை அதிகரிக்க அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் நிலவும் சட்டவிரோத மின் பவானையால் மாதாந்தம் பத்தாயிரம் அலகு மின்சாரம் மேலதிகமாகச் செலவாகின்றது.

சட்டபூர்வமாக மின்சாரம் பெறுவோருக்கு உடன் மின்விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரமளிக்கப்பட்ட விசேஷ உத்தியோகஸ்தர் திரு. ஏ. சி. இராசதுரை தெரிவித்தார். (உ-93)

### மருந்தகம் நிறுவ கோரிக்கை

கொழும்புத்துறையில் மத்திய அரசாங்க மருந்தகம் ஒன்றை ஆரம்பிக்குமாறு கொழும்புத்துறைக் கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ் சுகாதார சேவைகள் அத்தியட்சகரைக் கோரியுள்ளது.

இது சம்பந்தமாகச் சங்கச் செயலாளர் திரு. சி.சி. வரதராசா மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய கிராமமாக இருப்பதாலும், மணியந்தோட்டம், உதயபுரம், எழிலூர், வசந்தபுரம், பாண்டியன் தாழ்வு பகுதிகளை உள்ளடக்கிய கிராம மக்களும் பயன் பெறக்கூடியதாக இருப்பதாலும் இங்கு அரசாங்க மருந்தகம் நிறுவப்பட வேண்டியது முக்கியமானது என அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

### சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வருடாந்த உற்சவ ஆரம்பத்தை முன்னிட்டு தொல்புரம் கொட்டடிப்பதி ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர், இந்து இளைஞர் மன்றத்தினர், ஆலய பரிபாலன சபையினர், பொது மக்கள் ஆகியோர் இதில் ஈடுபட்டனர். (இ)

## ஐயாயிரம் பேருக்கு சங்கானையில் உதவி

சங்கானை, ஜூன் 16

இராணுவ நடவடிக்கைகளினால் அண்மையில் இடம்பெயர்ந்துசங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சமடைந்திருக்கும் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக நிவாரணம் வழங்கி வருகிறார்.

நிவாரண உதவி ஒருவர் கொண்ட குடும்பத்திற்கு ரூ. 55, இருவர் கொண்ட குடும்பத்திற்கு ரூ 70, மூவர்கொண்ட குடும்பத்திற்கு ரூ. 85, நான்கு பேருக்கு ரூ.105, ஐந்து பேருக்கு ரூ 155, ஆறுபேருக்கு ரூ. 170, ஏழுபேருக்கு ரூ. 185, எட்டுப் பேருக்கும் அதற்கு அதிகமானோரையும் கொண்ட குடும்பத்திற்கு ரூ. 200 என்ற அடிப்படையில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (உ-ரி)

## ஆபத்தை அகற்ற நாமபஜனை வழி

### கும்பாபிஷேக விழாவில் அருளுரை

சாவகச்சேரி, ஜூன் 15

இறைவனை முழுமையாக நம்பிக்கையுடன் வழிபடும்போது அந்த வழிபாடு என்றும் வீண் போவதில்லை.

தனித்தும் சேர்ந்தும் நாம் வழிபடலாம்.

இறைவனது நாமபஜனை ஆபத்துக்களை அகற்ற வல்லது. அல்லல்கள் அகலவே இன்று அனைவரும் ஆண்டவன் சந்நிதியை நாடுகின்றோம்.

இவ்வாறு சிவஞானசாகரம் சிவசிறீ கே. சோமசுந்தரக் குருக்கள் கூறினார்.

சரசாலை, நுணுவில் சிதம்பரவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக விழாவில் அவர் அருளுரை வழங்கினார்.

வேதாகமசோதிடபூஷணம்,சிவாசாரியதிலகம், சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் இக்கும்பாபிஷேக விழா நடைபெற்றது. (உ-31

## புங்குடுதீவில் அடிக்கடி மின் தடை

புங்குடுதீவு, ஜூன் 14

புங்குடுதீவில் மின் விநியோகம் அடிக்கடி தடைப் படுவதால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

கடந்த சில வாரங்களாக இந்நிலை நிலவி வருகிறது.

இரவு வேளைகளில் மின் விநியோகம் தடைப்படுவதால் வீடுகள் கடைகள் யாவும் இருளில் மூழ்க நெரிடுகிறது.

இது பற்றி வேலணையில் உள்ள மின்சார சபை அலுவலகத்திற்கு மின் பாவனையாளர்கள் முறையிட்ட போதிலும் எவ்வித பயனும் இல்லையாம். (இ-131)

## சுயமுயற்சிகள் மூலம் தொழில் வாய்ப்பு

### உதவி அரசஅதிபர் வலியுறுத்து

மானிப்பாய், ஜூன் 15

"படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களும் யுவதிகளும் அரசாங்க உத்தியோகத்திற்காக அலைகின்றார்கள்.

அரசாங்க உத்தியோகங்களை நாடாமல் சுயமுயற்சிகள் மூலம் தமது வாழ்க்கைக்கான தொழில் வாய்ப்புக்களை தேடிக் கொள்வது அவசியம். வளர்ச்சியடைந்த நாடுகளில் சுயமுயற்சித் திட்டங்களின் மூலமே வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது"

—இவ்வாறு உடுவில் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கூறினார்.

உடுவில் தேசிய சேவைகள் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

திரு. எஸ். ஜெயக்குமார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தேசிய சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த அதிகாரி திரு. எஸ். கார்த்திக் பேசுகையில்; தேசிய சேவைகள் மன்றத்தின் மூலம் பெண்கள், நடமாடும் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற முடியும். வேற்று நாட்டு மொழிகளை கற்கும் வாய்ப்பும் உண்டு. மேலும் பட்டுப்பூச்சி வளர்ப்பு, தும்புப் பொருள் தயாரிப்பு போன்ற சிறு கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான கடன் வசதிகளைப் பெற முடியும்.

தேசிய சேவைகள் இளைஞர் சம்மேளன உப தலைவர் திரு. பெ. அருட்சோதி, மானிப்பாய்ப் பிரிவு முதலுதவிப்படை அத்தியட்சகர் திரு. மகாலிங்கம் உட்பட பலரும் கருத்துரைகள் வழங்கினர்.

செல்வி எஸ். வளர்மதி நன்றியுரை வழங்கினார். (உ-90)

### பாதை சீர்கேடு

வட்டுக்கோட்டை, ஜூன் 15

வட்டுக்கோட்டையில் இருந்து கல்லுண்டாய் பாலம் வரை உள்ள 789 ஆம் இலக்க பஸ்பாதை மிகவும் சிரழிந்து பிரயாணம் செய்ய முடியாத வகையில் இருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியை அண்மையில் மக்கி போட்டு புனரமைப்புச் செய்த போதிலும் ஒருநாள் பெய்த மழைக்குப் பின் குன்றும் குழியுமாக சிரழிந்து விட்டது. (உ—161)

### ஆதீனமுதல்வர் குணமடைகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஹெலித் தாக்குதலினால் படுகாயமடைந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் தற்போது படிப்படியாக குணமடைந்து வருகிறார். (உ-161)

# சுமுகத்தீர்வு இல்லையேல் அபிவிருத்தி நிதியில் வெட்டுவிழும்

### பிரதி அமைச்சர் எச்சரிக்கிறார்

அம்பாறை, ஜூன் 15

'நாட்டின் இன்றைய பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு விரைவில் காணப்பட வேண்டும். பிரச்சினை மேலும் வலுவடையுமானால் அடுத்த வருடம் எமது தொகுதிகளின் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படாத நிலைகூட உருவாகலாம்.

பிரதி தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம்.ஏ. அப்துல்மஜீத் மேற்கண்டவாறு அச்சம் தெரிவித்தார்.

சம்மாந்துறை அல்—மர்ஜான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் ஜனாப் யூ. எம். முகைதீன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதி அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக பின்தங்கிய பகுதிகளுக்குக் கிடைத்த பல அபிவிருத்தி வாய்ப்புக்களும் தடைப்பட்டுள்ளன.

பிரச்சினைக்குத் தீர்வு காண நாம் எம்மாலான சகல ஒத்துழைப்புகளையும், நல்க வேண்டும். தீர்வு காணும்படி சம்பந்தப்பட்டவர்களை வற்புறுத்த வேண்டும்— என்றார். (உ-14)

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் கொள்ளை

வட்டுக்கோட்டை, ஜூன் 15

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய அம்மன் தாலி, அலங்காரப் பொருள்கள், கோவிலின் விலை உயர்ந்த தளபாடப் பொருள்கள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் கதவுகளைப் பலாத்காரமாகத் திறந்து உட்புகுந்த படையினரே மேற்படி பொருள்களைச் சூறையாடியதோடு அங்குள்ள பாரிய மின்சார இயந்திரம் ஒன்றையும் எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

ஆலயத்தின் மின் விளக்குகள் சேதப் படுத்தப்பட்டதோடு ஆலயத்திற்குப் பக்கத்திலுள்ள தர்மகர்த்தா சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் வீட்டிலிருந்த விலைமதிப்பான நூல்களும் கிணற்றில் வீசப்பட்டுள்ளன.

இச்சம்பவங்களை அடுத்து ஆலய நித்திய பூசைகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. (உ-161)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



இராசசிங்கம் கணபதிப்பிள்ளை

[உரிமையாளர் ஆர். கணபதிப்பிள்ளை அன் கம்பனி]

தோற்றம்: 08 – 06 – 1920

மறைவு: 15 - 05 - 1987

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அன்புச் சகோதரர்கள், பெருமக்கள் பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் நண்பர்கள்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஆண்டவனை அடையப் பாண்டித்தியம் தேவை இல்லை; விசுவாசமும் — மனத் தூய்மையும் பக்தியுமேதான் தேவை.
— சுவாமி சிவானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
15.6.1987 த.பெ.இல:- 23

# மாயையும் மருந்தும்

ஸ்ரீலங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு.லலித் அத்துலத் முதலி கடந்த ஒருவார காலமாகப் பேச்சுவார்த்தை பற்றியே பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார்.

பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை. பேச்சுவார்த்தைக்கான கதவுகளை அரசாங்கம் எப்போதும் திறந்து வைத்திருக்கிறது.

பேச்சுவார்த்தைக்கு உகந்த காலம் இதுவே. தமிழ்ப் போராளிகள் பேச்சுவார்த்தைக்கு வரவில்லையெனில் இராணுவ நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறாக எல்லாம் அமைச்சர் அத்துலத் அடிக்கடி அலம்புகிறார்; இல்லை இல்லைப் புலம்புகிறார்!

''ஒப்பரேஷன் லிபரேஷன்'' மூலம் குடாநாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றிய திமிரில்—

அந்த வெற்றியைக் கண்டு போராளிகள் மனம் சோர்ந்து போவார்கள், தங்கள் நிலைப்பாட்டில் தளர்ந்து கோரிக்கைகளில் படி இறங்குவார்கள் என்ற கற்பனையில்—

இராணுவத் தாக்குதல்கள் மூலம் பிடித்த வடமராட்சியை மட்டுமன்றி கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளையும் ஆக்கிரமிப்புப் பிரதேசங்கள் (Occupied Territory) என போராளிகளைக் கொண்டே அங்கீகரிக்கச் செய்யும் தந்திரோபாயத்துடனும் —

அவசியம் ஏற்பட்டால் இந்தியாவை எதிர்த்துப் போராடுவதற்கு ஏற்ற விதத்தில் ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் பலத்தை ஸ்திரப்படுத்துவதற்காக காலத்தைக் கடத்துவதற்குப் பேச்சுவார்த்தை உகந்த மார்க்கம் என திட்டமிட்டுமே—

அமைச்சர் பேச்சுவார்த்தை பற்றியும் போர் நிறுத்தம் பற்றியும் அடிக்கொரு தடவை உச்சரித்துக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது ''ஒப்பரேஷன் லிபரேஷன்'' நடவடிக்கையை இடைநடுவில் நிறுத்தியது, மீண்டும் தாக்குதல்களை நடத்துவதற்கான அவகாசத்தைப் பெறுவதற்காகவே என்பது கண்கூடு.

தாம் பிடித்த இடங்களில் தமது நிலையை வலுப்படுத்துவதற்காகவே போர் நிறுத்தம் பற்றி அரசு அக்கறை காட்டுகிறது என்பதும் வெளிப்படை.

எனவே அரசாங்கம் எண்ணுவது போன்று போராளிகள் பேச்சுவார்த்தைக்குப் போகப் போவதில்லை; போகவும் கூடாது. அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் திட்டவட்டமாக அறிவித்து விட்டார்.

தமிழர்களை அடித்து, அழித்து, பட்டினி போட்டு அவர்களை ஆக்கிரமிக்கலாம் அல்லது அற்ப சொற்ப சலுகைகளைக் கிள்ளிக் கொடுத்துத் திருப்திப்படுத்தலாம் என்ற கோட்பாட்டை ஸ்ரீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் கடைப்பிடிக்க முனைவது மடமையிலும் மடமை!

அந்த மாயை நிலையிலிருந்து ஸ்ரீலங்கா அரசும் குறிப்பாக அமைச்சர் அத்துலத்தும் உடனடியாக விடுபட வேண்டும்.

யதார்த்த நிலையை, உண்மை நிலைப்பாட்டைப் புரிந்து கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடைமுறைச் சாத்தியமான அரங்குக்கு அரசு இறங்கி வரவேண்டும்.

வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை மூடி, ஸ்ரீலங்காப் படைகளை தெற்கே அழைத்துச் சென்றால் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கு இடம் ஏது? போர் நிறுத்தத்தை உருவாக்குவதற்கான 'மருந்து' தங்களிடமே இருக்கும்போது, போராளிகளிடம் அதற்கான 'மருந்தை' உற்பத்திசெய்து தரும்படி கெஞ்சுவது அர்த்தமற்றதாகும்.

இராணுவத்தை வாபஸ் பெற்றுவிட்டு, தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைக் குறைவின்றிப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிறைவான மனதோடு ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை மேசைக்கு வருமானால், அவ்வேளை போராளிகளும் அங்கு செல்வார்கள்; செல்லுமாறு மக்கள் வற்புறுத்துவார்கள்.

ஆகையால் அரசு இப்போது உடனடியாகச் செய்ய வேண்டியது போர் நிறுத்தம் அல்ல. தமிழ்ப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை மூடுவது தான்!

இது அடிக்கடி பேச்சுவார்த்தை, போர்நிறுத்தம் என்று 'உருப்படி' போடும் அமைச்சர் அத்துலத்தின் கவனத்துக்கு உரித்தாகுக!

## எம். ஜி. ஆர் சென்னை திரும்பினார்

சென்னை, ஜூன் 14
முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் கடந்த வெள்ளி சென்னை திரும்பினார்.

மூன்று தினங்கள் புதுடில்லியில் தங்கி நின்று பிரதமர் ராஜீவ் காந்தி, வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் ஆகியோருடன் இலங்கை இனப்பிரச்சினை பற்றி திரு. இராமச்சந்திரன் பேச்சுக்கள் நடத்தினார்.

கொழும்பில் இந்தியத் தூதர் டிக்ஸிற், வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுடன் நடத்திய பேச்சுகள் பற்றிய விவரமும் திரு. இராமச்சந்திரனுக்குத் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## பிரேஸிலில் பொருளாதார நெருக்கடி

மூன்று மாதங்களில் பிரேஸிலின் பொருளாதார நெருக்கடிக்குதீர்வு காணும்நடவடிக்கைகளை தனது அரசு மேற்கொள்ளும் என்று ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். (இ-எ)

## அமைச்சரவை அறிவிப்பு

புதிய அமைச்சரவையைப் பிரதமர் மார்க்கரட் தட்சர் நேற்றுமுன் தினம் (சனி) அறிவித்தார்.

புதிய அமைச்சரவையில் 21 பேர் அங்கம் வகிப்பர்.

வெளியுறவுஅமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், உள்துறை அமைச்சர், நிதி அமைச்சர் ஆகிய பதவிகளை பழையவர்களே தொடர்ந்து வகிப்பர். (உ-எ)

# புதுடில்லியில் தீவிரவாதிகள் தாக்கி 12 பேர் பலி; 20 பேர் காயம்

புதுடில்லி, ஜூன் 14
சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் தெற்கு புதுடில்லியில் பன்னிரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர். 20 பேர் காயம் அடைந்தனர்.

கடந்த வெள்ளி மாலை நடந்த இச் சம்பவத்தைத் தொடர்ந்து புதுடில்லியில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்த வீட்டில் இருந்தவர்கள் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காரில் வந்திறங்கிய தீவிரவாதிகள் ஸ்டென் துப்பாக்கியினால் கண்டபடி சரமாரியாகச் சுட்டனர் என்றும் கிரனேட் வீசினர் என்றும் கூறப்படுகின்றது. (உ-எ)

**வெளி உலகில்**

# ஷெயில்சிங்கிற்கு ராஜீவ் விருந்து

புதுடில்லி, ஜூன் 14
புதிய ஜனாதிபதி வேட்பாளர் சம்பந்தமாக பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த வெள்ளிக்கிழமையும் பல அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர் திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாத், மற்றும் சில முதலமைச்சர்களுடன் பிரதமர் காந்தி பேசினார்.

இதனிடையில் கடந்த வியாழன் பிரதமர் காந்தி, தற்போதைய ஜனாதிபதி ஷெயில் சிங்கிற்கு தனது இல்லத்தில் விருந்துபசாரம் அளித்துக் கௌரவித்தார்.

ஜனாதிபதி தனது இரண்டு புதல்விகளுடன் கலந்துகொண்டார்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் அடுத்த மாதம் 24ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. (உ-எ)

## வியாழனன்று அமைச்சர்கள் சந்திப்பு

புதுடில்லி, ஜூன் 14
சார்க் அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர் மாநாடு எதிர்வரும் வியாழன் நடைபெறும்.

அதற்கு முன்னோடியாக நேற்று (ஞாயிறு) நிர்ழ்ச்சிக்கமிட்டி ஆரம்பமானது.

நிரந்தரக் கமிட்டிக் கூட்டம் செவ்வாய் ஆரம்பமாகும். (உ-எ)

## வன்செயல்களை தடுக்கும் திட்டம்

புதுடில்லி, ஜூன் 14
இந்தியாவில் இன, மத ரீதியான வன்செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் இதனை நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்ஸிலில் கூட்டம் விரைவில் நடைபெறும் என்றும் அதில் ஒருமைப்பாட்டுக்கு குந்தகமான விஷயங்கள் பரிசீலனை செய்யப்படும் என்றும் அமைச்சர்தெரிவித்தார். (இ-எ)

## 4 ஆயிரம் பேர் கைது

கோல், ஜூன் 14
தென் கொரிய அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்ட சுமார் 4 ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கடந்த புதன் கிழமை நாடு முழுவதும் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி, மக்களினால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்தியே எதிர்க்கட்சிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தின. (உ-எ)

## சீன கோரிக்கை

பீகிங், ஜூன் 14
வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும்படி ஈரான், ஈராக் ஆகிய நாடுகளை சீன கோரியிருக்கின்றது. (எ)

# பஞ்சாப்பிலும் 12 பேர் சுட்டுக் கொலை!

புதுடில்லி, ஜூன் 14
பஞ்சாப்பின் அமிர்தசரஸ் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இரவுக்குப் பின்னர் 12 பேர் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உதப்பி கிராமத்தில் ஹரியந்தர் சிங்கும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதேவேளை அமிர்தசரஸ் மாவட்டத்தில் அகாலிதள் (லோங்கோவாள்) பிரிவின் மாவட்ட உதவித் தலைவர் ஹர்ஜீத் சிங்கும் அவரது இரண்டு சகோதரர்களும், உறவினர் ஒருவரும் சனி இரவு தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். (உ)

## நிக்கரகுவாவில் ஹெலி மீது தாக்கு 15 பேர் உயிரிழப்பு

மனகுவா, ஜூன் 14
நிக்கரகுவா அரசுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகி தரையில் மோதி வீழ்ந்ததில் 15 பேர் உயிரிழந்தனர்.

இந்த ஹெலிக்கொப்டரைச் சுட்டு வீழ்த்தியதாக நிக்கராகுவா அரசுக்கு எதிராகப் போராடும் கொன்ட்ராஸ் கிளர்ச்சிக்காரர்கள் உரிமை கோரியிருக்கின்றனர்.

இதுவரை கொன்டரா கிளர்ச்சிக்காரர்கள் 4 அரசு ஹெலிக்கொப்டர்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளனர். (உ-எ)

## தென்னபிரிக்காவில் வன்செயல்கள்

கேப்டவுன், ஜூன் 14
அவசரகாலச் சட்டம் அமுல் நடத்தப்பட்ட ஓராண்டு நிறைவு தினத்தை ஒட்டி தென் ஆபிரிக்காவின் பல நகரங்களில் வன்செயல்கள் வெடித்தன.

கறுப்பு இனத்தவர்கள் வசிக்கும் நகரங்களில் குண்டுவெடிப்புச் சம்பவங்களும் மோதல்களும் இடம்பெற்றன.

கேப்டவுனில் உள்ள நீதிமன்றம் ஒன்றிலும் குண்டு ஒன்று வெடித்தது. (உ-எ)

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொதி போட்டது

# சர்வதேசச் சட்டத்தை மீறிய செயல் அல்ல

## ராஜீவ் இப்போதுதான் விழித்துக் கொண்டுள்ளார்

சென்னை, ஜூன் 13
இந்தியா விமானம் மூலம் உணவுப் பொதிகளை யாழ்ப்பாணத்தில் போட்டது சர்வதேசச் சட்டத்தை மீறிய செயல் அல்ல. நூற்றுக்கணக்கானோர் பட்டினியால் வாடும் போது எந்த நாடாவது இச்செயலை அநீதியானது என்று வர்ணிக்க முடியுமா?

முன்னாள் இந்திய உயர் நீதிமன்ற நீதியரசர் வி. ஆர். கிருஷ்ண ஐயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இந்து சமுத்திரம்—நாட்டை பலவீனப்படுத்தும் சர்வதேச சக்திகள்''— என்ற தலைப்பில் தேசிய ஒருமைப்பாட்டு நிறுவனம் நடத்திய கருத்தரங்கில் பங்கு பற்றிப் பேசுகையிலேயே திரு. கிருஷ்ண ஐயர் இதனைத் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது.

திரு. கிருஷ்ண ஐயர் மேலும் சொன்னதாவது;

நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது தான் பிரதமர் ராஜீவ் காந்தி விழித்தெழுந்திருக்கிறார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன தன் மீது இதுவரை சவாரி விட்டார் என்று இப்போதுதான் பிரதமர் காந்தி உணர்ந்திருக்கிறார்.

**காலம் பிந்தவில்லை**

அப்பாவித் தமிழர் ஸ்ரீலங்காவில் கொல்லப்படும் விதத்தை வர்ணிக்க முடியாதுள்ளது. ஹிட்லர் கூட இப்படி நடக்கவில்லை.

ஸ்ரீலங்காவில் இடம் பெறும் அரச பயங்கரவாதம் இனக்கொலை பற்றிய முழு விவரங்களை உலக நாடுகளுக்கு எடுத்து விளக்க இந்திய அரசு ஏன் தவறியது என்பது எனக்கு விளங்கவில்லை.

கிழக்குப் பாகிஸ்தானை (தற்போது பங்களாதேஷ்) முற்றாக அழித்துவிட பாகிஸ்தான் முயற்

பயங்கரவாத நாடு. ஸ்ரீலங்காவில் இருந்து கொண்டு எமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலைச் செய்ய அந்த நாடு முற்படுகின்றது.

இப்படி திரு. கிருஷ்ண ஐயர் சொன்னார்.

**அமிர் பேச்சு**

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் சொன்னதாவது;

தமிழரைப் படுகொலையில் இருந்து காப்பாற்ற இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும்.

### முன்னாள் நீதியரசர் கருத்து

சித்தபோது திருமதி இந்திரா காந்தி எப்படி நடந்துகொண்டார் என்பதை பிரதமர் காந்தி எண்ணிப் பார்க்க வேண்டும்.

இராணுவத் தலையீட்டுக்கு உத்தரவிட முன்னர் இந்திரா காந்தி உலக அபிப்பிராயத்தை அதற்குச் சாதகமாக மாற்றினார்.

ஆகவே ஸ்ரீலங்காவில் நடைபெறும் இனக் கொலையை உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்ல பிரதமர் காந்தி கட்சி பேதமின்றி உயர்ந்த தலைவர்களை அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு இன்னும் காலம் பிந்தவில்லை.

இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் இந்தியாவின் சார்பில் கலந்துகொள்ள முழு அமைச்சர் ஒருவரை பிரதமர் காந்தி இது காலவரை நியமிக்காது விட்டது ஆச்சரியகரமான விஷயம்.

[illegible]

இப்போது இந்தியா செயல்படவில்லையானால் எப்போது அது உதவப் போகின்றது?

தமிழ்நாடு மக்கள் இது குறித்து குரல் எழுப்பவேண்டும்.

திரு. காந்தியின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ பலத்தை 40 மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த 4 வருடங்களில் பாதுகாப்புச் செலவீனம் 400 மடங்காக உயர்ந்து விட்டது.

இந்தியத் தலையீடு குறித்து சாதக, பாதக நிலைகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் நேரமல்ல இது.

**கூலிப்படை**

கிழக்குப் பாகிஸ்தான் மக்களை பாகிஸ்தான் படுகொலை செய்தபோது பாகிஸ்தான் விமானங்கள் எரிபொருள் பெறும் வசதியை இலங்கை செய்து கொடுத்தது. [illegible]

நாட்டுப் பிரச்சினையில் தலையிட முடியாது என்று ஸ்ரீலங்காவினால் கூறமுடியாது.

இஸ்ரவேல், தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், சீன, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கூலிப்படைகள் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகக் கூட்டுச் சேர்ந்துள்ளபோது வெளிநாடு தலையிட முடியாது என்று கூறமுடியுமா?

இப்படி திரு. அமிர்தலிங்கம் கேட்டார்.

சென்னையில் உள்ள சோவியத் யூனியன் தூதரக அதிகாரி திரு கிராஷிகோவ் பேசுகையில், இந்து சமுத்திரம் அமைதிப் பிராந்தியமாக இருக்க வேண்டும்— என்று வற்புறுத்தினார்.

இலங்கைத் தமிழரைக் காப்பாற்றுவதற்குத் தேவையானால் இராணுவத்தலையீட்டையாவது இந்திய மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கூறும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (இ-எ)

## உற்சவம் ஒத்திவைப்பு

பண்டத்தரிப்பு, ஜூன் 15
மானிப்பாய் அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜூன் 6 ஆம் திகதி ஆரம்பமாக வேண்டிய வருடாந்த உற்சவம் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகஅறிய வருகிறது. (உ-120)

# உறுதியுடன் முயற்சி விடிவுக்கான வழி

## வண. பிதாவின் பிரார்த்தனை உரை

பண்டத்தரிப்பு, ஜூன் 15
துன்பத்தைக் கண்டு நாம் மனந்தளரக் கூடாது. தமிழர் படும் துயரம் வெகுவிரைவில் நீங்கும்.

நல்ல மனத்துடனும் கிறிஸ்தவ விசுவாசத்துடனும், இறைவனைத் தியானித்து உறுதியுடன் விடிவிற்கான புனித முயற்சிகளில் ஈடுபட்டால், இன்று தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பங்கள் இடந் தெரியாமல் மறையும். அடிப்பவர் கையும் உடையும்.

— அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பிரார்த்தனை வழிபாட்டில் கலந்து உரையாற்றிய அதிவண பிதா ஆர். எச். தேவசகாயம் இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தமது உரையில்—

இறைவன் துன்பங்கள் மூலம் எம்மைத் தூய்மைப் படுத்துகிறார். நாம் அனுபவிக்கும் துன்ப வேதனை பிறருக்கு வரக்கூடாது என்ற உணர்வு எமக்கும் ஏற்பட வேண்டும் என்பதற்காக துன்பங்கள் தந்து மன உறுதியையும் உளத் தூய்மையையும் இறைவன் ஏற்படுத்துகிறார். — என்றார்.

விசேஷ பிரார்த்தனையைத் தொடக்கி வைத்த தோலகட்டி பங்குத் தந்தை பிதா பெனட் நெஸ்கோ தமது உரையில்,

இறை நம்பிக்கையும் மன உறுதியும் எம்மை வழி நடத்த வேண்டும். எமக்கு ஏற்படும் துன்பங்களையும் இடர்களையும் உரிமைப் பறிப்புகளையும் நாம் இறைவனிடம் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

இறை விசுவாசம் என்றும் நம்பியவரை கைவிடுவதில்லை. ஒருமனதாகவும் முழுமனதாகவும் பிரார்த்தனை செய்வோம்! வெற்றி காண்போம்!!! என்றார். (உ-120)

## கும்பாபிஷேகமலர் வெளியீடு

வட்டுக்கோட்டை, ஜூன் 15
வட்டுக்கோட்டை கிழக்கு வாசகர் வட்ட இந்துமா மன்றத்தினர், வட்டுக்கோட்டைகிழக்கு பிரமனச்சி தோட்ட கற்பக விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ''கும்பாபிஷேக மலர்'' ஒன்றினை வெளியிடவுள்ளனர்.

இதேவேளை கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நக்கீர தேவர் அருளிய ''விநாயகர்திருவகவல்'' எனும் நூலையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். (இ-161)



**பொய்யாமொழி**

**குறள்:**
ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

**பொருள் :**
தக்க வழியில் பிறர்க்குக் கொடுக்கும் அளவு அறிந்து கொடுக்க வேண்டும்; அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

15 — 06 — 1987 திங்கட்கிழமை

YOUR FRIENDS IN FINANCE

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANCE LTD.

## வடமராட்சிப் பகுதியில் மீண்டும் இளைஞர் கைது

வல்வெட்டித்துறை, ஜூன், 15

வடமராட்சிப் பகுதிகளிலுள்ள வீடுகளில் சிப்பாய்கள் திடீர் தேடுதல் நடத்தி மீண்டும் இளைஞர்களைக் கைதுசெய்கின்றனர்.

பொதுமக்களை வீடுகளிலே தங்குமாறுகோரும் சிப்பாய்கள் திடீர் திடீரென சில பகுதிகளைச் சுற்றிவளைத்து இளைஞர்களைக் கைதுசெய்கின்றனர்.

கடந்தமாத இறுதியில் வடமராட்சியில் நிகழ்ந்த அசம்பாவிதங்களின்போது கைதுசெய்யப்படாமல் தப்பியிருந்த இளைஞர்கள் பலர் இத்திடீர் தேடுதல் வேட்டைகளின்போது கைதாகியுள்ளனர்.

கைதான இளைஞர்களை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முகாமில் சிப்பாய்கள் தடுத்து வைத்துள்ளனர்.

பிள்ளைகளை விடுதலை செய்யக்கோரி கைதான இளைஞர்களின் பெற்றோர்கள் முகாம்களுக்குப் படையெடுத்தவண்ணம் உள்ளனர். (உ-ள-160)

## வடக்கிற்கு நிவாரண உதவி

கொழும்பு, ஜூன் 15

வடபகுதியில் வைத்திய, நிவாரண வேலைகளை மேற்கொள்ளும் தொண்டர் வைத்திய நிறுவனங்களுக்கு மேலதிக நிதி உதவிகளை அளிக்க ஐரோப்பிய பொருளாதார சமூகம் தீர்மானித்து உள்ளது.

ஐரோப்பிய பொருளாதார சமூகம் வழங்கியுள்ள 1 லட்சத்து 16 ஆயிரம் அமெரிக்க டாலர் பணம் வடபகுதியில் வைத்தியக்குழு ஒன்றை நிறுவவும், மருந்துகள், வைத்திய உபகரணங்களை அனுப்பவும் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## அரசியல்வாதிகள் ஜே. வி. பியுடன் தொடர்பு

கொழும்பு, ஜூன் 15

ஜே. வி. பி இயக்கத்துக்கும் சில முக்கிய அரசியல்வாதிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் இதனை கொழும்புச் செய்தியாளர்களிடம் ஊர்ஜிதம் செய்திருக்கிறார். (உ-எ)

## இந்திய மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படை மீண்டும் துன்புறுத்துகிறது

இராமேஸ்வரம், ஜூன் 14

இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டு இருந்த இந்திய மீனவர்களிடமிருந்து சுமார் இருபதாயிரம் ரூபா பெறுமதியான மீன்வகைகளை ஸ்ரீலங்காக் கடற்படையினர் கைப்பற்றி கடலில் எறிந்துவிட்டனர்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றதாக இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் திரு. ஆ. அருளானந்தம் தெரிவித்தார்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் சுமார் 100 படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். அவற்றில் 6 படகுகளை ஸ்ரீலங்காக் கடற்படையினர் கைப்பற்றி அவற்றில் இருந்த மீன்வகைகளைக் கடலில் எறிந்தனர்.

இது பற்றி அரசு அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டிருப்பதாக திரு. அருளானந்தம் தெரிவித்தார். (உ-எ)

## நெடுமாறன் கோரிக்கை

திருச்சி, ஜூன் 14

ஸ்ரீலங்காஎன்னநினைத்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாது இந்தியா யாழ் தமிழருக்குத் தொடர்ந்து உணவுப் பொருள்களை விநியோகிக்கவேண்டும்.

—இப்படி தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-எ)

## வெங்கட்---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

டது.

குழுவின் தீர்மானத்தை பிரதமர் காந்தி, திரு. வெங்கட்ராமனின் இல்லத்துக்குச் சென்று அவருக்கு நேரில் தெரிவித்தார்.

பிரதமருடன், திரு. கமலபதி திரிபாதி, பொதுச் செயலாளர் ஜி. கே. மூப்பனார், மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் ஆகியோரும் சென்றிருந்தனர்.

திரு. வெங்கட்ராமன் தனது வேட்பு மனுவை இன்று திங்கள் பிற்பகல் தாக்கல் செய்வார் என எதிர்பார்க்கப் படுகிறது.

இதனிடையில் ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளர் ஒருவரை நியமிக்க எதிர்க்கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

இதற்கென நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழு இம்மாதம் 20 ஆம் திகதி கூடி எதிர்க்கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளரைத் தெரிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## வல்லைப் புதுப்பாலம் தகர்க்கப்பட்டுள்ளது

வல்வெட்டித்துறை, ஜூன், 15

அச்சுவேலியிலிருந்து பருத்தித்துறை நோக்கி செல்லும் வழியிலுள்ள வல்லைப் புதுப்பாலம் தகர்க்கப்பட்டுள்ளது.

சைக்கிளில் செல்பவர்கள்கூட இப் பாதையை பாவிக்க முடியாத அளவிற்கு பாலம் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ்-பருத்தித்துறை பஸ் சேவைகள் கொடிகாமம் ஊடாக நடத்தப்பட வேண்டியுள்ளன.

பாலம் யாரால் தகர்க்கப்பட்டதென்பதை அறிவதில் மக்கள் பெரும் ஆர்வம்காட்டுகின்றனர். (உ-ள-160)

## முள்ளி----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பணியில் இறங்கியுள்ளனர்.

சிப்பாய்கள் நேற்று மீண்டும் அவ்வழியால் வடமராட்சி செல்லும் பஸ் பயணிகளை இறக்கிச் சோதனையிடுகிறார்கள். (உ-ள-160)

## மானை---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இத்தகவல்களை வெளியிட்டார்.

கோவிலில் வேலை செய்த வயோதிப காவலாளியைப் படையினர் கோயிலை விட்டு விரட்டியுள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஆலயங்களை சிப்பாய்கள் அசுசைப் படுத்துவதையும் அவர் கண்டித்தார். (உ-ள)

## பொருளாதார நெருக்கடி அபாயம்:

## ஸ்ரீலங்காவிற்கு உலக வங்கி எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

ஸ்ரீ லங்காவின் பொருளாதாரம் நெருக்கடிக் காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உலக வங்கி எச்சரித்திருக்கின்றது.

ஸ்ரீ லங்கா அரசு 1977 இல் பதவி ஏற்றதன் பின்னர் இப்போதுதான் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது.

வளர்ச்சி குறைந்து வருகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கின்றது. நிதிநிலைமை மோசமாகி விட்டது.

- இப்படி உலக வங்கி ஸ்ரீலங்கா பற்றிய தனது 135 பக்க அறிக்கையில் தெரிவித்து உள்ளது.

1983 இல் இருந்து நிலவி வரும் இனப் பிரச்சினையும் நெருக்கடிக்கு முக்கிய காரணம் என அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் இம்மாதம் 25ஆம் திகதி பாரிஸில் நடைபெற உள்ளது. அக் கூட்டத்தில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும். (உ-எ)

## வண்ணை சிவன் கோவிலில் சிரமதானம்

கொக்குவில், ஜூன் 15

ஸ்ரீலங்கா அரசின் விமானக்குண்டுவீச்சிற்கு இலக்காகிச் சிதைவடைந்த யாழ் வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தின் சிதைவுகள் சிரமதானம் மூலம் நேற்று அகற்றப்பட்டன. (உ69)

## வீமன்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைப் பார்வையிடச் சென்ற இருவர் மாவிட்டபுரத்தில் வைத்து இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.

மாவிட்டபுரத்தில் மேல்மாடி வீடு ஒன்றில் நிற்கும் இராணுவம் சுற்றுடலில் தென்படுவோரை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்வதாகக் கூறப்படுகிறது.

இன்று காயமடைந்த இருவரும் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். விவசாயியான எஸ். விரசிங்கம் என்பவரும், அவரது உதவியாளருமே இவ்வாறு காயமடைந்ததாகக் கூறப்பட்டது. (உ-68)

## ஸ்ரீலங்கா செஞ்சிலுவை சங்கம் கூறியது பொய்

### யாழ் மாவட்டக்கிளை கண்டனம்

யாழ்ப்பாணம் ஜூன் 15

யாழ். குடாநாட்டில் எவ்வித உணவுத் தட்டுப்பாடும் இல்லை என்று ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளமை மிக அப்பட்டமான பொய்யாகும்.

இவ்வாறு யாழ் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கம் ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமைப் பீடத்திற்கு யாழ் குடாநாட்டின் உண்மை நிலை தெரியப்படுத்தப்படவில்லை.

யாழ் குடாவில் உணவுத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதற்கு, உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியும், அரச அதிபரும் விடுத்துள்ள அறிக்கைகளே சான்று.

ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் யாழ் வந்து நிலைமையை நேரில் பார்த்து புரிந்து கொள்வது நல்லது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு யாழ் குடாநாட்டின் உண்மை நிலையைதெரிவித்து உணவுத் தட்டுப்பாட்டை நீக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது. (உ-ள)

## ராஜீவை---

(1 ம பக்கத் தொடர்ச்சி)

செவ்வனே தொடர வழி செய்ய வேண்டும்.

★ ஆலயங்கள் மீது அரச படைகள் நடத்தும் தாக்குதல்கள் மிகவும் கண்டனத்துக்குரியதாகும். (அ-ள)

## ஸ்ரீலங்க -----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கொழும்பு திரும்பினார்.

அதன் பின்னர் செய்தியாளர்கள் திருமதி பண்டாரநாயக்காவை சந்தித்தனர்.

அப்போதே திருமதி பண்டாரநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்காவின் தற்போதைய நெருக்கடி குறித்து அதிர்ச்சி தெரிவித்த திருமதி பண்டாரநாயக்கா இதற்கான பொறுப்பை திரு. ஜெயவர்த்தனவும் அவரின் சகாக்களுமே ஏற்றுக் கொள்ள வேண்டும்— என்று சொன்னார். (உ-ள)

## மேலும் 100 பேர் தமிழகத்தில்

சுமார் 100 இலங்கை தமிழ் அகதிகள் நேற்று படகுகளில் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர்.

இவர்கள் தொண்டிப் பகுதியில் வழிதவறிச் சென்று பின்னர் ஒருவாறு சரியான வழியைக் கண்டு பிடித்து இராமேஸ்வரம் சென்றடைந்தனர். (உ-எ)

## கப்பலில் பொருள்கள் காங்கேசன் வந்தன

### இறக்கும் வேலையில் படையினர்

காங்கேசன்துறை, ஜூன் 15

அரசபடையினருக்குரிய பெருந்தொகையான பொருள்களை ஏற்றிக் கொண்டு சப்பல்கள் காங்கேசன் துறைக்கு நேற்று வந்து சேர்ந்தன.

கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்கும் வேலையில் இராணுவம் ஈடுபட்டுள்ளதாககூறப்படுகிறது.

இவ்வாறு பொருட்களை கப்பலிலிருந்து இறக்கி பலாலிக்கு எடுத்துச் செல்லும் போது - சென்றிக்காக நிறுத்தப்பட்டிருந்தஇராணுவம்ஊறணி என்னுமிடத்தில் பதிவாளரான மு. செல்வராசா என்பவரின் வீட்டை உடைத்து சேதப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. (உ-168)

## கப்பல் புறப்படவில்லை

பூஸாவில் இருந்து யாழ் அனுப்பப்படவிருக்கும் சுமார் ஆயிரம் தமிழ் இளைஞர்கள், கப்பலில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக நேற்றுப் புறப்படவில்லை.

இவர்கள் இன்றுதிங்கள் கப்பல் மூலம்யாழ் அனுப்பிவைக்கப் படுவார்கள்.

விடுதலை செய்யப்பட்டுள்ள இந்த இளைஞர்களில் பத்துச்சத வீதமானோர் தென் இலங்கையிலே தங்க விருப்பம் தெரிவித்திருக்கின்றனர். அவர்களுக்கு தென் இலங்கையில் புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வீடு பார்க்கச் சென்றவர் சூடுபட்டு மரணம்

### மாவிட்டபுரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

நேற்றுக்காலை மாவிட்டபுரத்தில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்றவர் இராணுவம் சுட்டதினால் மரணமானார்.

கந்தையா தருமலிங்கம் (வயது 59) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

அப்பகுதியில் மறைந்திருந்த இராணுவம் சுட்டதினால் நெஞ்சில் காயமுற்ற இவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும் வழியில் மரணமானார்.

இவரது சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (உ-10)

## சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமராட்சிப் பகுதியில் சிப்பாய்கள் தனியார் மினிபஸ்களில் ரோந்து புரிகின்றனர்.

பயணிகள் வாகனம் என எண்ணி இந்த மினி பஸ்களை பொதுமக்கள் மறிக்கும்பொழுது சிப்பாய்கள் கேலி செய்கின்றனராம்.

இதனால் அங்கு பொது மக்கள் அரச பஸ்களை நாடுவதில் அக்கறை எடுத்துள்ளனர். (உ-10)

## இந்தியா செல்வதற்காக

## வேலணைத்துறையில் தங்கி நின்ற அகதிகள் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

இந்தியா செல்லும் நோக்கத்துடன் வேலணைத் துறையில் அகதிகளாகத் தங்கி நிற்கும் பலர் அந்த நோக்கத்தைக் கைவிட்டு தத்தமது இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இந்தியாவில் தஞ்சம் புகும் நோக்கத்துடன் பல நூற்றுக் கணக்கானோர் வேலணைத் துறையை நோக்கிப் படையெடுத்தனர்.

இவ்வாறு சென்ற பலர் வேலணைத்துறையில் தங்கி நிற்கின்றனர்.

கடலில் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு இலக்காகலாம் என்ற அச்சத்தினாலும் -

வேலணைத் துறையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதன் காரணமாகவும் அங்கு தங்கி நின்ற பலர் தமது முயற்சியைக் கைவிட்டு திரும்புகின்றனர். (உ-10)

## வீதியில் உடல் தேயத் தேய

## கவச வாகனத்தில் கட்டி இழுத்தனர்

### படுகாயமுற்ற இளைஞர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

படுத்துஇருந்த என்னை வெளியில் இருந்து வந்த இராணுவத்தினர் தட்டி எழுப்பி சுமார் அரை மைல் தூரம் வரை கவச வாகனத்தில் கட்டி வீதியில் உடல் தேயத் தேய இழுத்துச் சென்றனர்.

பூநகரி நல்லூர்ப் பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து சின்னையா சுப்பிரமணியம் (வயது 26) என்பவர் தெரிவித்ததாவது:-

கடந்த 27 ஆம் திகதி நண்பகல் 12மணியளவில் நான் வீட்டினுள் படுத்திருந்தேன்.

அப்பொழுது வீதியால் இராணுவ வாகனங்கள் சென்று கொண்டிருப்பதாக வெளியில் நின்றவர்கள் கூறுவது எனக்கு கேட்டது.

இராணுவத்தினரைக் கண்டு பயந்தோடியவர்களை நாலாபுறத்திலும் இராணுவத்தினர் தேடினர்.

வீட்டுக்குள் படுத்திருந்த என்னை பயந்து ஓடி வந்தவர் என்று சிப்பாய்கள் வந்து வெளியே இழுத்துச் சென்று துவக்கினால் அடித்தனர்.

பின்னர் தமது கவச வாகனம் ஒன்றுடன் என்னைக் கயிற்றால் கட்டி வீதியில் இழுத்துச் சென்றனர். இதனால் எனது உடல் எங்கும் காயங்கள் ஏற்பட்டன.

சுமார் அரை மைல் தூரம் வரை இழுத்துச் சென்ற பின்னர் என்னை அவிழ்த்து மின்கம்பம் ஒன்றுடன் சேர்த்துக் கட்டி சப்பாத்துக்காலினால் தாக்கினர்.

நான் கத்திக் குழறினேன்.

கவச வாகனத்தால் என்னை இடிக்க வருவது போல் பயப்படுத்தினர்.

அதன் பின்னர் நான் மயங்கி விட்டேன்.

—இப்படி அவர் தெரிவித்தார்.

தற்பொழுது அவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-10)

## தங்கையின் மானம் காக்க

### தன்னுயிர் ஈந்த தமயன்

வல்வெட்டித்துறை, ஜூன் 15

தங்கையின் மானத்தைக் காப்பாற்ற தன்னுயிர் ஈந்த தமிழ்த் தமயன் ஒருவர்!

ஆம். தங்கையை மானபங்கம் செய்ய முயன்ற சிப்பாயைத் தடுத்த தமயனை ஏனைய சிப்பாய்கள் உலக்கையால்அடித்துக் கொன்றதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று வடமராட்சிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் பொலிகண்டிப் பகுதியில் சிப்பாய்கள் தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது சில சிப்பாய்கள் பெண்களிடம் தகாதமுறையில் நடக்க எத்தனித்தனராம்.

ஒரு பெண்ணைச் சிப்பாய் ஒருவர் நெருங்கிய போது பெண்ணின் சகோதரர்கள் சிப்பாய்களுடன் வாக்குவாதப் பட்டனர்.

சினமுற்ற ஏனைய சிப்பாய்கள் பெண்ணின் சகோதரர்களை அங்கிருந்த உலக்கையால் அடித்துவிட்டு ஓடினராம்.

சகோதரர்களில் ஒருவர் உலக்கை அடியால் சம்பவம் நடந்த இடத்திலேயே பலியானார். மற்றவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இறந்தவரின் பெயர் பெரியதம்பி சின்னத்தம்பி. காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவர் பெரியதம்பி சிவஞானம் ஆவர். இச்சம்பவம் உப்புக் கிணற்றடிப் பிள்ளையார் கோவிலடியில் இடம் பெற்றது. (அ-ள-160)

## சுகாதார உதவியாளர்கள் சேவையில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

சிறுவர் பாதுகாப்பு நிதியத்துடன் இணைந்து தெல்லிப்பளை பொது சுகாதாரப்பயிற்சி நிலையம் நடத்திய 3 மாதப் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களைசேவையில் அமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை, மானிப்பாய், ஊர்காவற்றுறை, கோப்பாய், பருத்தித்துறை, சுகாதாரப்பகுதிகளைச் சேர்ந்த கிராமிய சுகாதார உதவியாளர்கள் இன்றும் நாளையும் [illegible]னுவில் சுகாதாரப் பணிமனைக்கு சமுகம் தரும்படி சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

சாவகச்சேரி, கிளிநொச்சியிலுள்ள சுகாதார உதவியாளர்களை அப்பகுதி வைத்திய அதிகாரிகளின் காரியாலயங்களுக்கு சமுகம்தரும்படியும் அவர் கேட்டுள்ளார். (உ-ள)

## மறியற்போர்

லண்டன், ஜூன் 15

அம்பாறை மாவட்டம் அரந்தலாவையில் அண்மையில் புத்த பிக்குகள் கொல்லப்பட்டதைக் கண்டித்து பிரிட்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முன்னால் மறியற்போர் நடத்தப்பட்டது.

லண்டனில் உள்ள புத்த பிக்குகள் சிலர் இந்த மறியற் போரை நடத்தினர்.

தமிழ் பயங்கரவாதிகளுக்கு வழங்கும் ஆதரவை விலக்குமாறு இந்தியாவைக் கோரும் சுலோக அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர். (உ)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 15-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Monday June 15, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org